# காணிக்கைப் பொருளாய் வருகின்றேன்

காணிக்கைப் பொருளாய் வருகின்றேன்
பலியென என்னையும் தருகின்றேன்
ஆபேலின் பலியினை ஏற்றது போல்
என்னை உம் பலியாய் மாற்றிடுவாய்

**1**
கோதுமை மணியுடன் கலந்து என் இதயத்தைக்
கனிவுடன் பதமதில் படைத்து நின்றேன்
ஏழ்மை எந்நிலையினை உணர்ந்து தந்திடுவேன்
ஏழையென் இதயத்தை ஏற்றிடுவாய்

**2**
திராட்சைக் கொடியுடன் இணைந்த என் மனதையும்
திறமைகள் யாவையும் கொடுத்து நின்றிடுவேன்
வறுமை என் நிலையினை மாற்ற வந்திடுவேன்
வெறுமையை நீக்கி என் பலி ஏற்பாய்